# ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் இலண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாசலில் 03.10.2008 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரை

**தஸஹ்ஹுத் தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹா ஓதிய பிறகு ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:**

கடந்த சில குத்பாக்களுக்கு முன்பு நான் அல்லாஹ்வின் **முஹைமின்** என்ற பண்பு குறித்து கூறியிருந்தேன். அதைப் பற்றி விளக்கமாக புரிய வைத்திருந்தேன். அதன் பொருளையும் கூறியிருந்தேன். அதற்கு பல்வேறு அகராதி நூல்களில் கூறப்பட்டிருந்த பொருளையும் எடுத்துக் கூறினேன். பொதுவாக இதற்கு **அடைக்கலம் வழங்குபவன்** என்ற பொருள் தரப்படுகிறது. அல்லாஹ்தான் ஒவ்வொரு பொருளின் இறுதி அடைக்கலமாக இருக்கின்றான். அவனிடமிருந்துதான் பாதுகாப்பு கிடைக்கின்றது. தன்னுடன் களங்கமற்ற தூய தொடர்பு வைத்து தன்னுடன் ஒன்றியிருப்பவர்களுக்கு அவன் அற்புதமான அடையாளங்களை காட்டுகின்றான். **முஹைமின்** என்பதற்கு **சாட்சி** என்ற பொருளும் தரப்பட்டிருக்கின்றது. இறைவன் தனது அடியார்களுக்கு குறிப்பாக தன்னால் அனுப்பப்பட்ட நபிமார்களுக்கு சாட்சியாக நிற்கும்போது தனது அடியார்கள் மீது ஒவ்வொரு எதிரியும் சுமத்துகின்ற குற்றச்சாட்டுகளையும், பொய்யான கருத்துக்களையும் மறுத்தவாறு அவர்களது உண்மைக்கு சாட்சியாக நிற்கின்றான். **படைப்பினங்களை கண்காணிப்பவன், அவற்றை பாதுகாப்பவன்** என்ற பொருளும் இதற்கு இருக்கின்றது. **அச்சத்திலிருந்தும் ஒருவருக்கு அமைதியை வழங்குபவன்** என்ற பொருளும் இதற்கு இருக்கின்றது. அல்லாஹ் தனது பண்பை தனது குறிப்பான சிறப்புமிக்க அடியார்களுக்காக வெளிப்படுத்தும்போது அவனது கண்காணிப்பு மற்றும் பாதுகாப்பு ஆகியவை தொடர்பான வழக்கத்திற்கு மாற்றமான அடையாளங்கள் வெளிப்படுகின்றன. அல்லாஹ்வின் பண்புகளை வெளிப்படுத்தக்கூடியவர்களாகவும் இந்த மக்கள் இருக்கின்றார்கள். முதலாவதாக, இந்த பண்புகளிலிருந்து நபிமார்கள்தான் அருள்களைப் பெறுகின்றார்கள். இவர்களுக்காக இறைவனின் ஒவ்வொரு பண்பும் வழக்கத்திற்கு மாற்றமாக செயல்பட்டு அவர்களது உண்மையை நிரூபிக்கின்றது. அதன் மூலமாக இந்த நபர் இறைவன் புறமிருந்து அனுப்பப்பட்டவர் என்பது உலகத்திற்கு தெரிந்து விடும். அந்த நபியின் உண்மையை நிரூபித்துக் காட்டுவதற்காக அவரை ஏற்றுக் கொண்டவர்கள் மீதும் அல்லாஹ் அந்த பண்புகளை வெளிப்படுத்திக் காட்டுகின்றான். **முஹைமின்** என்ற இறை பண்பில் மறைந்திருக்கும் விரிவான பொருளை எடுத்துக் காட்டும் விதமாக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது வாழ்க்கையிலிருந்தும் சில சம்பவங்களைக் கூறவுள்ளேன். அத்துடன் சில சான்றோர்களின் வாழ்வில் நடைபெற்ற சம்பவங்களையும் கூறுவேன். அதிலிருந்தும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் உண்மையை வெளிப்படுத்துவதற்காக அல்லாஹ் அற்புதமான முறையில் அவனது பாதுகாப்பை வெளிப்படுத்தியுள்ள காட்சியை நம்மால் பார்க்க முடிகிறது.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு எது கிடைத்திருந்தாலும் அதனை அவர்கள் தனது எஜமானனான ஹஸ்ரத் முஹம்மத் முஸ்தஃபா (ஸல்) அவர்களிடமிருந்தே பெற்றார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உண்மையும், இஸ்லாத்தின் உண்மையும் வெளிப்பட வேண்டும் என்பதற்காகவே அல்லாஹ் அவர்கள் மீது அருள் செய்துள்ளான்.

**ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தொடர்பாக ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்:**

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது வாழ்க்கையில் அவர்களுக்கு மிகவும் இக்கட்டான அபாயம் நிறைந்த **ஐந்து சந்தர்ப்பங்கள்** வந்துள்ளன. அந்த சந்தர்ப்பங்களில் ஒருவர் தனது உயிரை பாதுகாத்துக் கொள்வது வெளிப்படையாகப் பார்க்கும் போது அறவே சாத்தியமற்ற ஒன்றாக தெரியும். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் உண்மையில் இறைவனின் உண்மையான தூதராக இல்லாமலிருந்தால் நிச்சயமாக இப்படிப்பட்ட அபாயகரமான சந்தர்ப்பங்களில் அழிந்து போயிருப்பார்கள்.

**முதலாவது சந்தர்ப்பம்,** மக்கத்துக் காஃபிர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வீட்டை முற்றுகையிட்ட சந்தர்ப்பமாகும். அப்போது நிச்சயமாக நாங்கள் இந்த நபரை (ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை) கொலை செய்வோம் என்று அவர்கள் சத்தியம் செய்து கூறினார்கள்.

**இரண்டாவது சந்தர்ப்பம்,** காஃபிர்கள் மிகப்பெரும் எண்ணிக்கையில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், ஹஸ்ரத் அபூபக்கர் (ரலி) அவர்களுடன் மறைந்திருந்த அந்த குகையை சென்றடைந்த நிகழ்ச்சியாகும்.

**மூன்றாவது சந்தர்ப்பம்,** உஹத் போர்க்களத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஒரு சமயத்தில் தன்னந்தனியாக இருந்தபோது காஃபிர்கள் அவர்களை சுற்றி முற்றுகையிட்டார்கள். அவர்களை பல வாள்களால் தாக்கினார்கள். ஆனால் அதனால் எதுவும் நடக்கவில்லை. இது ஒரு அற்புதமாகும்.

**நான்காவது சந்தர்ப்பம்,** ஒரு யூதப் பெண் அவர்களுக்கு விஷம் கொடுத்து கொல்ல முயற்சி செய்தவாறு, மாமிசத்தில் விஷத்தைக் கலந்து அவர்களுக்கு விருந்தளித்த சந்தர்ப்பமாகும். அது மிக கடுமையான பிறரை அழிக்கக்கூடிய விஷமாக இருந்தது.

**ஐந்தாவது இக்கட்டான அபாயகரமான சந்தர்ப்பம்,** குஸ்ரு பர்வேஷ் என்ற பாரசீக மன்னர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை கொலை செய்ய வேண்டும் என்ற உறுதியான எண்ணத்துடன் அவர்களை கைது செய்வதற்காக தனது சிப்பாய்களை அனுப்பிய சந்தர்ப்பமாகும்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்:**

இவ்வாறான அபாயம் நிறைந்த எல்லா சந்தர்ப்பங்களிலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தப்பித்து அந்த எல்லா எதிரிகளையும் இறுதியில் வெற்றி கொண்டு அவர்கள் மீது தனது ஆதிக்கத்தை நிலைநாட்டியது உண்மையில் அவர்கள் ஒரு உண்மையாளர் என்பதற்கு வலுவான சான்றாக திகழ்கிறது. இறைவன் அவர்களுடன் இருக்கின்றான் என்பதற்கும் அது ஓர் ஆதாரமாகும்.

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

இது ஒரு வியக்கத்தக்க விஷயமாகும். எனக்கும் இப்படிப்பட்ட ஐந்து இக்கட்டான சந்தர்ப்பங்களை சந்திக்க வேண்டியது வந்தது. அதில் எனது கண்ணியத்திற்கும் உயிருக்கும் மிகப்பெரிய ஆபத்து இருந்தது.

**முதலாவது சந்தர்ப்பம்,** டாக்டர் மார்ட்டின் கிளார்க் என்பவர் என் மீது கொலைக் குற்றம் சுமத்தி தொடுத்த வழக்கு.

**இரண்டாவது இக்கட்டான சந்தர்ப்பம்,** மிஸ்டர் ரோஹி சாஹிப் Gurdaspur District Commissioner அவர்கள் முன்னிலையில் காவல்துறை என்மீது தொடுத்த அவதூறு வழக்கு.

**மூன்றாவது அபாயகரமான சந்தர்ப்பம்,** கரம்தீன் என்ற ஒரு நபர் ஜெஹ்லம் என்ற இடத்தில் என் மீது தொடுத்த வழக்கு.

**நான்காவது இக்கட்டான சந்தர்ப்பம்,** இதே கரம்தீன் குர்தாஸ்பூரில் எனக்கு எதிராக தொடுத்த வழக்கு.

**ஐந்தாவது சந்தர்ப்பம்,** பண்டிட் லேக்ராம் கொலை செய்யப்பட்ட பிறகு எனது வீடு சோதனைக்கு உள்ளாக்கப்பட்டது. எதிரிகள் என்னை கொலையாளி என்று நிரூபிப்பதற்கு முழுமையான முயற்சியை செய்தார்கள். ஆனால், அப்படிப்பட்ட எல்லா வழக்குகளிலும் எதிரிகள் தோல்வியைத் தழுவினார்கள்.

இந்த எல்லா சம்பவங்களையும் விரிவாக இப்போது எடுத்துக் கூறுவது சாத்தியமற்ற ஒன்றாகும்.

டாக்டர் மார்ட்டின் கிளார்க் எத்தகைய பொய்யான வழக்கை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மீது தொடுத்திருந்தார் என்றால் மார்க்கமற்ற ஈமானில்லாத ஒரு இளைஞரைத் தூண்டி விட்டு என்னை இவர்தான் டாக்டர் மார்ட்டின் கிளார்க்கை கொலை செய்யும்படி கூறி அனுப்பி வைத்தார் என்று அவரை பொய்யான வாக்குமூலம் கொடுக்க வைத்தார்கள். இந்த இளைஞரும் அவ்வப்போது தான் சார்ந்திருக்கும் மதத்திலிருந்தும் மாறிக்கொண்டேயிருந்தார். என்னிடம் பைஅத் வாங்குங்கள் என்று கூறியவாறு அவர்

காதியானுக்கும் வந்திருந்தார். ஆனால், ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் அவரது பைஅத்தை ஏற்றுக் கொள்ளவில்லை. அவர் எப்படிப்பட்ட நபர் என்பது அவர்களுக்கு தெரிந்து விட்டது. டாக்டர் மார்ட்டின் கிளார்க் ஒரு கிறிஸ்தவ பிரச்சாரகராகவும் இருந்தார். அவர் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை எதிர்த்தவர்களில் ஒருவராக இருந்தார். இதற்கு காரணம் கிறிஸ்தவத்தின் தவறான போதனைகளுக்கு எதிராக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் குரல் எழுப்பி வந்தார்கள். ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் இறைவனால் அனுப்பப்பட்ட தூதரேயாவார் என்பதையும் அவர்கள் நிரூபித்துக் காட்டினார்கள்.

சுருக்கமாக கூறுவதென்றால், இந்த வழக்கில் அனைத்து எதிரிகளும் ஒன்று சேர்ந்து தங்களது எதிர்ப்பில் எல்லை மீறி செயல்பட்டார்கள். எதுவரையென்றால், மவ்லவி முஹம்மது உஸைன் பட்டாலவி அவர்களும் இந்த சந்தர்ப்பத்தில் கிறிஸ்தவத்திற்கு ஆதரவாக செயல்பட்டு வந்தார். ஆனால், அல்லாஹ்வின் அருளால் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் எதிரிகளின் தீங்கிலிருந்தும் பாதுகாப்பாக இருப்பார்கள் என்று அல்லாஹ் ஏற்கனவே அவர்களுக்கு அறிவித்து விட்டான்.

டெக்லஸ் என்ற நீதிபதி இவ்வழக்கின் உண்மை நிலையை முழுமையாக கேட்டறிந்து இறுதியில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் குற்றமற்றவர் என்று தீர்ப்பு கூறினார். தனது அடியாரின் உண்மையை நிரூபிப்பதற்காக அல்லாஹ் எப்படி அவர்களுக்கு ஆதரவாக நிற்கின்றான்? இதைப் பற்றி நீதிபதி டெக்லஸ் அவர்களே கூறியுள்ளவற்றை கேளுங்கள்.

அஹ்மதியல்லாத ராஜா குலாம் ஹைதர் சாஹிப் அவர்கள் இந்த நீதிமன்றத்தில் பணிபுரிந்து வந்தார். அவர் கூறுகின்றார். தீர்ப்பு கூறுவதற்கு முன் ஒரு பயணம் செல்வதற்காக நீதிபதி டெக்லஸ் அவர்கள் இரயில் நிலையத்தின் பிளாட்பார்மில் இங்குமங்கும் உலாவிக் கொண்டிருந்தார். அவர் மிகுந்த கவலையில் ஆழ்ந்திருந்தார். நீங்கள் ஏன் இவ்வளவு கவலையில் காணப்படுகின்றீர்கள்? என்று நான் (ராஜா குலாம் ஹைதர் சாஹிப்), அவரிடம் கேட்டேன். அதற்கு எதையும் என்னிடம் கேட்காதீர்கள் என்று அவர்கள் கூறினார்கள். இறுதியில் நான் மிகவும் வலியுறுத்திக் கேட்ட பிறகு அவர் என்னிடம் இவ்வாறு கூறினார். நான் எப்போதிருந்து ஹஸ்ரத் மிர்ஸா சாஹிபின் உருவத்தை பார்த்தேனோ அப்போதிருந்தே நான் ஒரு மலக்கு மிர்ஸா சாஹிபை சுட்டிக் காட்டியவாறு மிர்ஸா சாஹிப் பாவியல்ல. அவர் மீது எந்த குற்றமும் இல்லை என்று கூறுகின்ற காட்சியை நான் கண்டு கொண்டிருக்கின்றேன்.

இதற்கு பிறகு நீதிபதி உண்மையை ஆய்வு செய்வதில் தனது வழிமுறையை மாற்றினார். உண்மையான குற்றவாளியை இந்த மக்களுடன் வைக்காமல் அவரை போலீஸிடம் ஒப்படைத்தார். இதனால் இறுதியில் உண்மை வெளிப்பட்டது.

இவ்வாறே ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை இழிவுபடுத்தும் நோக்கத்தில் எதிரிகள் தீட்டியிருந்த எல்லா சூழ்ச்சிகளையும் அல்லாஹ் முறியடித்து அவர்களை முற்றிலும் தோல்வியடையச் செய்தான். அவர்களது விடுதலை தொடர்பாக இறைவன் அறிவித்தபடி அதை நிறைவேற்றி அவர்களை மகிழ்ச்சியடையச் செய்தான்.

மார்ட்டின் கிளார்க் தொடுத்த வழக்கு தொடர்பாக ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் தாம் கண்ட ஒரு ரூஹ்யா (ஆன்மீகக் காட்சி) தொடர்பாக இவ்வாறு கூறுகின்றார்கள்:

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மீது பாதிரி மார்ட்டின் கிளார்க் வழக்கு தொடுத்த சமயத்தில் அச்சத்தால் பீதியடைந்து துஆ செய்தேன். இரவில் நான் ரூஹ்யா (ஆன்மீகக் காட்சி) யில் நான் இவ்வாறு பார்த்தேன். நான் ஒரு பள்ளிக்கூடத்திலிருந்து வந்து கொண்டிருந்தேன். மிர்ஸா சுல்தான் அஹ்மத் சாஹிப் அவர்களின் வீடு இருந்த அந்த தெருவில் அவர்களது வீட்டிற்கு கீழ்பகுதியில் இருந்த ஒரு வீட்டில் நுழைய நான் முயற்சி செய்கின்றேன். அந்த இடத்தில் சீருடையில் இருந்த போலீஸ்காரர்களை நான் பார்த்தேன். அவர்களில் ஒருவர் நான் வீட்டிற்கு நுழைவதிலிருந்தும் என்னை தடுத்து நிறுத்தினார். பிறகு இன்னொருவர் இவர் இந்த வீட்டை சார்ந்த நபர்தான். இவரை உள்ளே செல்வதற்கு நாம் அனுமதிக்க வேண்டும் என்று கூறினார். வீட்டின்

வராண்டாவில் நின்றவாறு நான் வீட்டிற்குள் நுழைந்த போது அந்த வீட்டிற்கு கீழ்பகுதியில் ஒரு அறை இருந்தது. அதை எங்கள் தாத்தா அவர்கள் கட்டியிருந்தார்கள். வராண்டாவில் நுழைந்ததும் கீழே உள்ள அறைக்குச் செல்வதற்கான ஏணிப்படிகள் இருந்தன. பிறகு சிறிது காலம் கழிந்த பிறகு எரிப்பதற்கான விறகுகள், கரிகள் போன்றவை இந்த அறையில்தான் போடப்பட்டன. நான் வீட்டிற்குள் நுழைய முயன்றபோது போலீஸ்காரர்கள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை வாசலிலேயே தடுத்து நிற்க வைத்திருப்பதை நான் பார்த்தேன். அவர்களுக்கு முன்னாலும் பின்னாலும் எரிப்பதற்கான எரிபொருள்களின் குவியல் இருப்பதை நான் பார்க்கின்றேன். அப்போது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் கழுத்து மட்டுமே எனக்கு தெரிந்தது. அங்குள்ள சிப்பாய்கள் அங்கு குவிந்திருந்த எரிபொருள்கள் மீது மண்ணெண்ணையை ஊற்றி அவற்றிற்கு நெருப்பு மூட்ட முயற்சி செய்து கொண்டிருப்பதைக் கண்டதும் முன்னால் வந்து அந்த நெருப்பை அணைக்க முயற்சி செய்கின்றேன். இந்த சமயத்தில் சில சிப்பாய்கள் என்னை பிடித்தார்கள். நான் கடுமையான அச்சத்திற்கு ஆளானேன். இவர்கள் இந்த எரிபொருள்கள் மீது நெருப்பை மூட்டிவிடக்கூடாதே என்று நான் பயந்தேன். இந்த சமயத்தில் எனது பார்வை மேல்நோக்கி சென்றது. அப்போது அங்குள்ள கதவின் மேற்புறத்தில் மிகவும் தடித்த எழுத்துக்களில் **இறைவனின் அன்பிற்குரிய அடியார்களை யாரால் எரிக்க முடியும்?** என்று எழுதப்பட்டிருந்தது.

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறியுள்ளார்கள்:**

மறுமையில் மட்டுமல்லாமல் இவ்வுலகிலும் நம்பிக்கையாளர்களுக்கு அமைதியும், இரட்சிப்பும் கிடைக்கின்றது.

(தொடர்ந்து இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களின் கூற்றை ஹுஸூர் அவர்கள் படிக்கின்றார்கள்.)

நாம் நமது வாழ்வில் இப்படிப்பட்ட இருபதிற்கும் மேற்பட்ட சம்பவங்களை பார்த்துள்ளோம். அவர்களிடம் வாளோ தங்களை தற்காத்துக் கொள்வதற்கான எந்தவொரு பொருளும் இருந்ததில்லை. ஆனால், அல்லாஹ் அவர்களை பாதுகாப்பதற்கான ஏற்பாட்டை செய்துள்ளான்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஹகீகத்துல் வஹீ என்ற தமது நூலில் தனது உண்மைக்கான அடையாளத்தை எடுத்துக் கூறியவாறு இவ்வாறு கூறுகின்றார்கள்.

25-வது அடையாளமானது கரம்தீன் என்பவர் எனக்கு எதிராக தொடுத்த வழக்கு பற்றி நான் செய்த முன்னறிவிப்பாகும். அந்த வழக்கை ஜெஹ்லம் என்ற இடத்தில் அவர் என் மீது தொடுத்திருந்தார். அது பற்றி இறைவன் அறிவித்த முன்னறிவிப்பின் அதன் அசல் சொற்கள் இதுவாகும்.

**ரப்பீ குல்லு ஷய்யின் காதிமுக ரப்பீ ஃபஹ்பழ்னி வன்ஸுர்னி வர்ஹம்னி** – என் இறைவா! ஒவ்வொன்றும் உன்னுடைய தொண்டிற்காகவே! என்னுடைய இறைவா! என்னை பாதுகாப்பாயாக! எனக்கு உதவி செய்வாயாக! என் மீது கருணை காட்டுவாயாக!

மற்ற இறை அறிவிப்புகளிலும் நான் குற்றமற்றவன் என நிரூபிக்கப்படுவேன் என்ற வாக்குறுதி இருந்தது. இறுதியில் இந்த வழக்கில் நான் குற்றமற்றவன் என இறைவன் நிரூபித்து விட்டான்.

இது தொடர்பாக நான் (ஹுஸூர்) ஜமாஅத்திற்கு துஆவின் பக்கம் கவனமூட்ட விரும்புகின்றேன். சில நாட்களுக்கு முன்னர் நான் கனவில் பார்த்தேன். எதிரிகள் ஏதோ சூழ்ச்சி செய்கின்றார்கள். அதுபற்றி என்னால் யூகித்துப் புரிந்து கொள்ள முடிகிறது. எதிரிகளின் தாக்குதல்களுக்கு முன்பே இதுபற்றி எனக்கு தெரிந்து விடுகிறது. அப்போது நான் **ரப்பீ குல்லு ஷய்யின் காதிமுக ரப்பீ ஃபஹ்பழ்னி வன்ஸுர்னி வர்ஹம்னி** என்ற துஆவை ஓதுகின்றேன். இதை ஓதிக் கொண்டிருக்கும்போதே எனக்காக இந்த துஆவை செய்வதை விட அதிகமாக ஜமாஅத்திற்காக இந்த துஆவை செய்ய வேண்டும் என்று நான் நினைக்கின்றேன். இந்த துஆவில் ஜமாஅத்தையும் சேர்க்க வேண்டும் என்று நான் கருதுகின்றேன். எனவே, நான் உங்களிடம் துஆவிற்காக வேண்டுகின்றேன். ஜமாஅத் சகோதரர்களும் தங்களது துஆக்களில் இந்த துஆவையும் கண்டிப்பாக சேர்த்துக் கொள்ளுங்கள். அல்லாஹ் எல்லா விதமான தீங்கிலிருந்தும் நம்மில் ஒவ்வொருவரையும் பாதுகாப்பானாக. ஜமாஅத்தையும் பாதுகாப்பானாக.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு ஆறுதல் கூறுவதற்காக அல்லாஹ் இன்னும் பல இல்ஹாம்களை இறக்கியதுடன், ஆன்மீக காட்சிகளையும் காட்டியுள்ளான். அவற்றைப் பற்றி பல்வேறு இடங்களில் அவர்கள் குறிப்பிட்டுக் கூறியுள்ளார்கள். அல்லாஹ் அவர்களைப் பார்த்து இவ்வாறு கூறியுள்ளான்.

நான் ஒவ்வொரு களத்திலும் உம்முடன் இருப்பேன். ஒவ்வொரு எதிர்ப்பின் போதும் **ரூஹுல் குத்ஸ்** – பரிசுத்த ஆவியின் மூலமாக உமக்கு உதவி புரிவேன். பிறகு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு இவ்வாறு இறை அறிவிப்பு வந்துள்ளது.

**அலா இன்ன அவ்லியாயுல்லாஹி லா ஹவ்ஃபுன் அலைஹிம் வலாஹும் யஹ்ஸனூன்** – எச்சரிக்கை! எவர்கள் இறை நெருக்கத்தைப் பெற்ற மக்களாக இருப்பார்களோ அவர்கள் மீது எவ்வித அச்சமும் இல்லை. அவர்கள் துயரப்படவும் மாட்டார்கள்.

**<u>ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:</u>**

உம்மை எதிர்க்கின்ற ஒவ்வொருவரும் தோல்வியைத் தழுவுவார் என்று இறைவன் எனக்கு வாக்களித்துள்ளான்.

பிறிதோரிடத்தில் **ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை)** அவர்கள் கூறுகின்றார்கள்:

எனது அன்பிற்குரியவர் எனக்கு மிகவும் அருகில் இருக்கின்றான் என்று இறைவன் கூறியுள்ளான். இறைவன் அருகில்தான் இருக்கின்றான். ஆனால், எதிரிகளின் கண்களுக்கு அவன் மறைவாக இருக்கின்றான். அவர்கள் உம்மை கொலை செய்துவிட விரும்புகிறார்கள். அல்லாஹ் உம்மை பாதுகாப்பான். உம்மை கண்காணிப்பான். நான் உன்னை பாதுகாப்பேன். அல்லாஹ்வின் அருளும், பரிவும் உம்மை பாதுகாக்கும் என்று ஒரு இல்ஹாம் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு வந்துள்ளது.

இன்னொரு அறிவிப்பில் அசல் சொற்கள் அரபியில் இருக்கின்றது. அதன் மொழியாக்கத்தைப் படிக்கிறேன்.

எதிரிகள் இறைவனின் ஒளியை அணைக்க நாடுகின்றார்கள். அந்த ஒளியை அந்த இறைவனே பாதுகாப்பான் என்று நீர் கூறுவீராக. இறைவனின் அருளும் பரிவும் உன்னை கண்காணிக்கிறது. நாமே இதை இறக்கியுள்ளோம். நாமே இதை பாதுகாப்போம். இறைவன் பாதுகாப்பு வழங்குபவர்களில் சிறந்தவனாவான். அவன் எல்லாரையும்விட அதிகமாக கருணை காட்டுபவனாவான். அவர்கள் உம்மை இன்னும் பலவற்றைக் கொண்டும் அச்சுறுத்துவார்கள். இவர்கள்தான் மறுப்பின் தலைவர்கள் ஆவார்கள். அச்சம் கொள்ள வேண்டாம். உமக்குதான் வெற்றி கிடைக்கும். தெளிவுகள், ஒளிமயமான அடையாளங்கள், ஏற்றுக் கொள்ளப்படுதல், அபிவிருத்தி ஆகியவற்றின் அடிப்படையில் நீர்தான் மிகைத்து நிற்பீர். இறைவன் பல களத்திலும் உமக்கு உதவி செய்வான். வாக்குவாதங்களும் கருத்துப் பரிமாற்றங்களும் நடைபெறும்போதும் அவன் உமக்கே வெற்றியை வழங்குவான்.

எனது நாட்கள் உண்மைக்கும், பொய்யிற்கும் இடையிலுள்ள வித்தியாசத்தை மிக தெளிவாக காட்டிவிடும். வெற்றி எனக்கும் எனது தூதருக்கும்தான் என்பதை இறைவன் எழுதி விட்டான். இறைவனின் வார்த்தைகளை மாற்றுபவர் எவரும் இல்லை. இறைவனின் பணி மார்க்கத்தின் உண்மைக்கான தெளிவான ஆதாரமாகும். நான் எனது தரப்பிலிருந்தும் உமக்கு உதவியை வழங்குவேன். நானே உமது துக்கத்தை அகற்றுவேன். உமது இறைவன் வல்லமைமிக்கவன்.

இவை இறைவன் இல்ஹாம் மூலம் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு அறிவித்தவையாகும்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தான் நபி என்று வாதம் செய்வதற்கு முன்பும்கூட இறைவன் அவர்களுக்கு பல்வேறு வகையில் தனது பாதுகாப்பை வழங்கியுள்ளான்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்:**

எனது தந்தை குலாம் முர்தஸா சாஹிப் அவர்கள் மரணமடைவதற்கான அந்த நேரம் நெருங்கிவிட்ட போது அவர்களது மரணத்திற்கு சில நொடிகள் எஞ்சியிருக்கும்போது அவர்களது மரணம் தொடர்பாக இறைவன் எனக்கு இந்த சொற்களில் அறிவித்துள்ளான். **வஸ்ஸமாயி வத்தாரிக்** – அதாவது அந்த வானத்தின் மீது ஆணையாக! சூரியன் மறையும் நேரத்தில் ஏற்படும் அந்த விபத்தின் மீது ஆணையாக!

எனது தந்தை உயிருடன் வாழ்ந்த அந்த நாட்களில் எங்களது வாழ்க்கைக்கு தேவையான அனைத்துமே அவர்கள் மூலமாகவே நிறைவேறி வந்தது. எனவே, மனிதன் என்ற நிலையில் இந்த எண்ணம் எனது உள்ளத்தில் தோன்றியது. அதாவது அவர்களது மரணம் எங்களுக்கு பல்வேறு துன்பங்கள் ஏற்பட காரணமாக இருக்கும். அவர்கள் உயிர் வாழ்வதன் மூலம் எங்களுக்கு கிடைத்துக் கொண்டிருந்த பெருந்தொகையும் இனி கிடைக்காது. இவ்வாறான எண்ணம் வந்த மாத்திரத்திலேயே **அலைஸல்லாஹு பி காஃபின் அப்தஹு** – இறைவன் தன் அடியாருக்கு போதுமானவன் அல்லவா? என்ற இல்ஹாம் வந்தது. வெளிச்சம் வந்ததும் இருள் நீங்கி விடுவது போல் எனது உள்ளத்திலிருந்த அந்த எண்ணமும் இந்த இல்ஹாம் வந்ததுமே நீங்கி விட்டது. அந்த நாளில் சூரியன் மறைந்ததும் எனது தந்தையார் வஃபாத் ஆகி விட்டார்கள். இவ்வாறே இல்ஹாமில் கூறப்பட்டிருந்தது.

**அலைஸல்லாஹு பி காஃபின் அப்தஹு** – என்ற இல்ஹாம் முதலிலேயே பலருக்கும் கூறப்பட்டது. லாலா ஸரம்பத் மற்றும் லாலா மலாவாமல் ஆகியோருக்கும் காதியானில் வசிக்கும் பிற சமூகத்தைச் சேர்ந்த பலருக்கும் இந்த இல்ஹாம் தொடர்பாக முதலிலேயே தெரிவிக்கப்பட்டது. அவர்கள் இறைவன் மீது ஆணையிட்டு இதை கூறத் தயாராக இருக்கின்றார்கள்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள்இந்த இல்ஹாமை ஒரு மோதிரத்தில் பதித்தார்கள். தற்செயலாக லாலா மலாவாமல் அவர்கள் தனது பணி சம்பந்தமாக அமிர்தசரஸ் சென்ற சமயத்தில் இந்த இல்ஹாமிய சொற்களை மோதிரத்தில் பதிப்பதற்காக அதனை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் அவரிடம் ஒப்படைத்தார்கள்

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கையிலிருந்த அந்த மோதிரம் இன்று வரை இருக்கினறது. அது கிலாஃபத்தன் பங்கில் வந்தது.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

லாலா மலாவாமல் அவர்கள் அந்த சொற்களை மோதிரத்தில் பதித்து அதை ஓர் முத்திரையாக செய்து கொண்டு வந்தார். ஹகீம் முஹம்மத் –ரீஃப் மர்ஹூம் அவர்களது கடையிலிருந்து செய்யப்பட்டு, அந்த மோதிரம் அமிர்தசரஸிலிருந்து கொண்டு வரப்பட்டது.

அது இன்று வரை எனது கையில் இருக்கின்றது.

இல்ஹாமில் குறிப்பிட்டிருந்தபடி எனது தந்தையாரின் மரணம் சூரியன் மறைந்து சிறிது நேரம் கழிந்த பிறகு நிகழ்ந்தது. எனது தந்தையார் தனது நோயிலிருந்து விடுபட்டு உடல் ஆரோக்கியம் நன்றாக ஆகிவிட்ட பிறகு அல்லது அவர்கள் நல்ல வலிமையுள்ளவராக இருக்கும் நிலையில எவ்வித மரணத்திற்கான அறிகுறிகளும் வெளிப்படாத நிலையில எவருமே ஒரு வருடத்திற்குள் அவர்கள் இறந்து விடுவார்கள் என்று கூற முடியாமல் இருந்தது. ஆனால், இறைவனின் நாட்டத்திற்கேற்ப இல்ஹாமில் குறிப்பிட்டிருந்தபடி சூரியன் மறைந்த பிறகு அவர்களது மரணம் நிகழ்ந்தது.

பிறகு இரண்டாவது இல்ஹாமும் நிறைவேறியது. எனது தந்தையாரின் மரணம் காரணமாக நான் எதிர்பார்த்த எந்த உலகியல் துக்கமும் எனக்கு ஏற்படவில்லை. மாறாக, வல்லமைமிக்க இறைவன் என்னை தனது கருணையின் நிழலின்கீழ் எப்படி எடுத்துக் கொண்டான் என்றால் அது ஒரு உலகையே வியப்பில் ஆழ்த்தி விட்டது. எந்த அளவு அவன் என்னை கவனித்து எனக்கு போதுமானவனாகவும், பாதுகாவலனாகவும் ஆகி விட்டான் என்றால் இன்றைய தேதி (20 ஆகஸ்ட் 1899) வரை எனது தந்தையார் மரணித்து 24 வருடங்கள்

கழிந்த பிறகும் (இன்று ஹிஜ்ரி 1317 ரபியுஸ்ஸானியாகும்) கூட அவன் எல்லா விதமான துன்பங்களிலிருந்தும் என்னை பாதுகாத்து எனது தேவைகளை அவனே நிறைவு செய்துள்ளான். எனது தந்தையார் வாழ்ந்த காலகட்டத்தில் நான் எவராலும் அறியப்படாமல் இருந்தேன். இறைவன் லட்சக்கணக்கான மக்கள் மத்தியில் எனது புகழை பரவும்படி செய்துவிட்டான். எனது தந்தையார் வாழ்ந்த காலத்தில் நான் எனது சக்திக்கேற்ப எந்தவிதமன பொருள் வசதியும் எனக்கென்று இருக்கவில்லை. இறைவன் அவர்களது மரணத்திற்குப் பிறகு இந்த இயக்கத்திற்கு உதவி செய்யும் வகையில் எந்த அளவு எனக்கு உதவி புரிந்துள்ளான் என்றால் (இன்னும் அவன் எனக்கு உதவுகின்றான்) அதன் மூலம் ஜமாஅத்திலுள்ள ஏழைகள், தர்வேஷ்கள், விருந்தாளிகள், உண்மையை தேடுபவர்கள் ஆகிய இறை அடியார்கள் எல்லா திசையிலிருந்தும் நூற்றுக்கணக்கில் இங்கு வருகின்றார்கள். மேலும் எழுத்துப் பணிக்காக ஆயிரக்கணக்கில் அவர்கள் செலவு செய்கின்றார்கள். எப்போதும் இந்த தேவையை இறைவன் நிறைவு செய்து வருகின்றான். இதற்கு இந்த கிராமத்திலுள்ள எல்லா முஸ்லிம்களும், இந்துக்களும் சாட்சிகளாக இருக்கின்றார்கள். இவர்களது எண்ணிக்கை 2000 -க்கும் அதிகமாக இருக்கும்.

**ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் சாஹிப் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:**

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு குதிரை சவாரியும், நீச்சலும் நன்றாகத் தெரியும். அவர்கள் ஒரு முறை இவ்வாறு கூறினார்கள்.

ஒருமுறை சிறிய வயதில் நீந்திக் கொண்டிருந்த சமயத்தில் நான் தண்ணீரில் மூழ்க ஆரம்பித்தேன். அப்போது ஒரு கிழவர் என்னை தண்ணீரிலிருந்தும் வெளியே கொண்டு வந்தார். அந்த நபரை இதற்கு முன்பும் நான் கண்டதில்லை. இதற்கு பிறகும் நான் அவரை பார்க்கவில்லை.

அதாவது அல்லாஹ் அவர்களை பாதுகப்பதற்காக மலக்கு வடிவில் இந்த நபரை அனுப்பியுள்ளான்.

மேலும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் என்னிடம் இவ்வாறு கூறினார்கள்.

ஒருமுறை நான் ஒரு குதிரையில் சவாரி செய்தேன். அதனை கட்டுப்படுத்த முடியாத நிலையில் அது மிகவும் வேகமாக ஓட ஆரம்பித்தது. நான் அதை எப்படியாவது தடுத்து நிறுத்த முயற்சி செய்தேன். ஆனால், அந்த குதிரை தீங்கு விளைவிப்பதிலேயே குறியாக இருந்தது. அது நிற்காமல் ஓடிக்கொண்டிருந்தது. அது முழுமையான வேகத்தில் ஒரு மரம் அல்லது சுவரின் பக்கம் ஓடியது. பிறகு எந்த அளவு வேகமாக அதன் மீது குதிரை மோதியது என்றால் அதன் தலை உடைந்து அந்த இடத்திலேயே அந்த குதிரை செத்தது. ஆனால், என்னை அல்லாஹ் காப்பாற்றி விட்டான்.

**ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் சாஹிப் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்:**

வரம்புமீறி தலை கால் புரியாமல் ஓடும் குதிரையில் ஒருபோதும் ஏறக்கூடாது என்று ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் பலமுறை எங்களுக்கு அறிவுரை கூறியுள்ளார்கள்.

அந்த குதிரை என்னை கொன்றிருக்கும். ஆனால், நான் ஒருபுறமாக விழுந்து விட்டேன். அதனால் உயிர் தப்பினேன். அந்த குதிரை இன்னொரு பக்கம் விழுந்து செத்து விட்டது என்று ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறினார்கள். இறைவனது சிறப்பான பாதுகாப்பின் காரணமாகவே ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் உயிர் தப்ப முடிந்தது.

**ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் தமது ஒரு சம்பவத்தை விளக்கி இவ்வாறு கூறுகின்றார்கள்:**

ஒரு வழக்கில் இந்தியாவைச் சேர்ந்த ஒரு கிறித்தவருக்கு தூக்கு தண்டனை விதிக்கப்பட்டது. அவர் புரிந்த குற்றம் என்னவென்றால், அவர் கோபம் கொண்டு தனது மனைவியை கொலை செய்து விட்டார். வழக்கு தொடுக்கப்பட்ட போது நீதிபதியின் முன்னிலையில் வாக்குமூலம் கொடுத்த சமயத்தில் அவர் இவ்வாறு கூறினார். மவ்லவி ஸனாவுல்லா சாஹிபின் சொற்பொழிவுகளை கேட்டு கேட்டு எனது உள்ளத்தில்

அஹ்மதிகள் தொடர்பாக அவர்கள் எல்லா மதங்களின் பகைவர்களாகவும் இருக்கின்றார்கள் என்ற எண்ணம் உருவானது. கிறித்தவம், இந்துமதம், சீக்கியர்கள், முஸ்லிம்கள் ஆகியோரின் எதிரிகளாக இவர்கள் உள்ளனர் என்று கருதியவாறு அஹ்மதிய்யா ஜமாஅத்தின் இமாமை நான் கொல்வேன் என்ற உறுதியான எண்ணத்தில் இருந்தேன். நான் இந்த நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக காதியான் சென்றேன். அப்போது காதியானுக்குப் பக்கத்திலுள்ள கிராமமான தேரோசேச்சிக்கு அஹ்மதிய்யா ஜமாஅத்தின் இமாம் சென்றுள்ளார் என்று அறிந்து அந்த கிராமத்திற்கு சென்றேன். அங்கு அதிகமாக அஹ்மதிகள் இருந்தார்கள். ஓரிடத்திலிருந்து நான் துப்பாக்கியை வாங்கினேன். அந்த கிராமத்திற்கு சென்றதும் நான் அவரை தாக்குவேன் என்று நினைத்துக் கொண்டேன். தேரோசேச்சி வந்து சேர்ந்ததும் நான் அவரை சந்திக்கச் சென்றேன். அப்போது எனது பார்வை ஒரு நபர் மீது பட்டது. அந்த நபர் அவருடன் இருந்தார். அவர் தனது துப்பாக்கியை சுத்தம் செய்து கொண்டிருந்தார். (ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் தன்னுடன் இருந்த அந்த நபர் மர்ஹூம் யஹ்யா கான் சாஹிப் என்று கூறியிருக்கின்றார்கள்.)

குற்றவாளி தொடர்ந்து தனது வாக்குமூலத்தில் இவ்வாறு கூறுகின்றார்:

இந்த சமயத்தில் தாக்குதல் நடத்துவது சரியல்ல என்று நான் கருதினேன். வேறு ஒரு சமயத்தில் நான் இவர் மீது தாக்குதல் நடத்துவேன் என்று எண்ணியவாறு நான் வேறு இடத்திற்கு சென்று விட்டேன். அங்கு சென்ற பிறகு வீட்டிற்கு போய் வருவோம் என்று நினைத்தேன். வீட்டிற்கு வந்து சேர்ந்ததும் மனைவி தொடர்பாக சில விஷயங்கள் கேள்விப்பட்டு அதனை என்னால் சகித்துக் கொள்ள முடியவில்லை. துப்பாக்கியால் சுட்டு அவளை நான் கொன்று விட்டேன். இது தற்செயலாக நடைபெற்ற விபத்து போன்று ஆகி விட்டது. அவ்வாறு இல்லையென்றால், நான் வேறு ஒரு நபரைத்தான் கொல்ல இருந்தேன்.

**ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்:**

அல்லாஹ் எதிரி எடுத்த வைத்த காலடியை தடுத்து நிறுத்தி எவ்வாறு அவனது சூழ்ச்சிகளை முறியடித்து விடுகின்றான்? முதலில் இந்த நபர் காதியான் வந்தார். ஆனால் நான் காதியானில் இல்லை. பிறகு நான் சென்ற பிறகு தெரோசேச்சிக்கு அவர் வருகின்றார். அங்கும் நான் அவரை தனியாக சந்திக்கவில்லை. அவரை சந்திக்கும் சமயத்தில் என்னுடன் இன்னொரு நபர் இருக்கின்றார். அந்த நபரது கையில் தற்செயலாகத்தான் துப்பாக்கி இருந்தது. இதைக் கண்ட அவர் இப்போது தாக்குதல் நடத்துவது சரியல்ல என்று கருதுகின்றார். பிறகு அங்கிருந்தும் அவர் இங்குமங்குமாக திரிந்து இறுதியில் வீட்டிற்கு வருகின்றார். இறுதியில் தனது மனைவியை கொன்று விட்டு அதற்கு தண்டனையாக தூக்கில் தொங்க வேண்டியது வந்தது. இவ்வாறே அல்லாஹ் தனது அடியார்களுக்கு உதவி செய்கின்றான்.

ஆரம்ப காலத்திலிருந்த நமது ஒரு முபல்லிக் ஷேக் அப்துல் வாஹித் சாஹிப் அவர்களின் ஒரு சம்பவத்தை கூறுகின்றேன். ஃபிஜி தீவில் இவர் முபல்லிக் ஆக இருந்தார். 1968 –ல் ஃபிஜி தீவிலுள்ள BAA என்ற நகரத்தில் அஹ்மதிய்யா பிரச்சார நிலையத்தை திறப்பதற்கு இவர் முயற்சி செய்தார். இதற்காக ஒரு வீடும் வாங்கப்பட்டது. அப்போது அங்கு கடுமையான எதிர்ப்பு ஆரம்பமாகி விட்டது. இஸ்லாத்தையும், அஹ்மதிய்யத்தையும் பரப்புவதில் இந்த பிரச்சார நிலையத்திற்கு வெற்றி கிடைக்க விட மாட்டோம் என்று அவர்கள் கூறினார்கள். அபூபக்கர் என்ற பெயரில் இருந்த ஒரு நபர் இவர்களின் தலைவராக செயல்பட்டார். அஹ்மதிகள் இந்த நகரத்தில் பிரச்சார நிலையத்தை வாங்கினால் நாங்கள் அதை எறித்து விடுவோம் என்று அவர் அறிவிப்பு செய்தார். எல்லா விதமான தற்காப்பு ஏற்பாடுகளும் செய்த பிறகு காவல் நிலையத்திற்கு அருகில் இருந்த ஒரு வீடு பிரச்சார நிலையத்திற்காக வாங்கப்பட்டது. காவல்துறையினரும் நாங்கள் பாதுகாப்பிற்கான ஏற்பாட்டை செய்வோம் என்று கூறினார்கள். இந்த முபல்லிக் சாஹிப் கூறுகின்றார். இவ்வறெல்லாம் செய்த பிறகும் இரவு நேரத்தில் யாரோ மிஷனிலுள்ள ஒரு பகுதியில் மண்ணெண்னைய ஊற்றி விட்டு அங்கு நெருப்பு மூட்டினார். நெருப்பு மூட்டியவர் அங்கிருந்து உடனடியாக ஓடி விட்டார். இந்த நெருப்பை இனி அணைக்க முடியாது என்பது அவருக்கு தெரியும். ஆனால், அந்த நெருப்பு எவ்வித இழப்பையும் ஏற்படுத்தாத நிலையில் இறைவன் அந்த நெருப்பை அணைத்து விட்டான். சில மரத்துண்டுகள் மட்டுமே எரிந்திருந்தது தெரிய வந்தது. அதனை ஜமாஅத்தில் உள்ளவர்கள் சரி செய்து விட்டார்கள். அல்லாஹ்

அந்த இடத்தை பாதுகாத்தான். அப்போது நமது முபல்லிக் நூருல் ஹக் சாஹிப் அன்வர் அவர்கள் மரத்துண்டுகள் எரிந்திருந்த அந்த அறையில் நின்றவாறு மிகவும் துக்கத்துடன் பெருமூச்சு விட்டவாறு எவர் அல்லாஹ்வின் மார்க்கமான இஸ்லாத்தை பரப்புகின்ற இந்த பிரச்சார நிலையத்தை எரிக்க முயற்சி செய்தாரோ அல்லாஹ் இவரது வீட்டில் நெருப்பு எரியும்படி செய்து அவரை அழிப்பானாக என்று கூறினார்கள். எதிரிகளின் தலைவனாக செயல்பட்ட அபுபக்கர் கோயாவின் வீட்டில் நெருப்பு பற்றிக் கொண்டது. அதை அணைப்பதற்கு முயற்சி செய்த பிறகும் அது அணையவில்லை. அந்த முழு வீடும் எரிந்து சாம்பலானது.

இவைதான் இறைவன் தனது அன்பான அடியார்களுக்கென்று காட்டும் அடையாளங்களாகும். தனது **முஹைமின்** என்ற பண்பின் அடிப்படையில அந்த இறைவன் அச்சத்திலிருந்தும் நமக்கு வெற்றியை வழங்குபவனாகவும், தனது அடியார்களை கண்காணிப்பவனாகவும் பாதுகாப்பவனாகவும் இருக்கின்றான் என்பதற்கும் தனது பக்கம் வருபவர்களுக்கு அவன் அடைக்கலம் வழங்குகின்றான் என்பதற்கும் இந்த அடையாளங்கள் ஆதாரமாக இருக்கின்றன.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

மனிதன் தனது சுருக்கமான வாழ்நாளில் ஆபத்துகளிலிருந்தும் பாதுகாப்பாக இருப்பதற்கு எந்த அளவு தேவையுள்ளவனாக இருக்கின்றான் என்ற விஷயத்தை விளக்கிக் கூறுவதற்கு எந்த ஓர் ஆதாரமும் தேவையில்லை.

எனவே, தனிப்பட்ட நபர் என்ற நிலையிலும் துன்பங்களிலிருந்து இறைவனின் பாதுகாப்பின் கீழ் இருக்க துஆ செய்ய வேண்டும்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

மனிதனின் செயல்களின் விளைவாக அவனுக்கு நேரும் துன்பங்களிலிருந்தும் ஆபத்துகளிலிருந்தும் அவன் பாதுகாப்பாக இருக்க வேண்டும் என்று விரும்புகின்றான் இந்த எல்லா விஷயங்களும் உண்மையான தவ்பா மூலமாக கிடைக்கின்றது. எவருக்கு முழுமையான ஈமான் இருக்குமோ அவரை அல்லாஹ் இத்தகு ஆபத்துகளிலிருந்து பாதுகாக்கின்றான்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

தவ்பா செய்வதால் ஏற்படும் பலன்களில் ஒன்று அல்லாஹ் தவ்பா செய்பவரின் கண்காணிப்பவனாகவும், பாதுகாவலனாகவும் ஆகி விடுகின்றான். எல்லா ஆபத்துகளையும் அல்லாஹ் அவரிடமிருந்து விலக்கி விடுகின்றான். எதிரிகள் தயார் செய்கின்ற தீய சூழ்ச்சிகளிலிருந்தும் அல்லாஹ் அவர்களை பாதுகாக்கின்றான். அவனது இந்த அருளும் கருணையும் குறிப்பிட்ட ஒருவருக்கு மட்டும் உரியதல்ல. மாறாக, எல்லா இறை அடியார்களும் அவனை சார்ந்திருந்தால் அவன் பக்கம் வருகின்ற ஒவ்வொருவரையும் அவர் இறைவன் கட்டளையிட்டதை செய்து அவன் தடுத்தவற்றிலிருந்தும் விலகி இருந்தால் அவரும் முதலில் தவ்பா செய்த அந்த நபர் போலவே ஆகிவிடுவார். அவன் ஒவ்வொரு உண்மையான தவ்பா செய்பவரையும் துன்பங்களிலிருந்தும் பாதுகாக்கின்றான். அவன் மீது நேசம் கொள்கின்றான்.

எனவே, இவற்றை புரிந்து செயல்படும் நல்வாய்ப்பை அல்லாஹ் நமக்கு வழங்கி நம்மில் ஒவ்வொருவரையும் தனது சிறப்பான பாதுகாப்பில் வைப்பானாக!

★ ★ ★ ★ ★

**JUMUA KUTHBA**
**HADHRAT KHALIFATUL MASIH V**
**AT BAITUL FUTUH MOSQUE, LONDON**
**ON 03.10.2008**

Translated by : **Maulavi M. Rafeeq Ahmad H.A.**
Published by : **MAJLIS KHUDDAMUL AHMADIYYA**
ASHURA EAST STREET, MELAPALAYAM,
TIRUNELVELI – 627 005.
**TELEFAX : 0462 - 2352456**